# மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்

# அசல் வழக்கு எண்.19/14

2019 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 19-ம் நாள் செவ்வாய் கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.2 மனோகரன் என்பவரது குறுக்கு விசாரணை, திருமதி.பழனியம்மாள், பெஞ்ச் கிளர்க் கிரேடு -1 என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமாணம் செய்து வைக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை 1வது பிரதிவாதி தரப்பில்**

நான் அரும்பாவூர் மேல்நிலை பள்ளியில் சத்துணவு அமைப்பாளராக பணி செய்து வருகிறேன். தாவா சொத்துக்கு அருகில் தற்போது என் பெயரில் விவசாய நிலங்கள் இல்லை. 2013ம் ஆண்டில் இருந்து வழக்கு சொத்துக்கு அருகில் என் பெயரில் விவசாய நிலங்கள் இல்லை. எங்கள் குடும்பத்தில் பாகபிரிவினை நடந்தது. அதற்கு பிறகு என் பெயரில் விவசாய நிலங்கள் இல்லை. என்னுடைய முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் தற்போதும் நான் நிலங்களை அனுபவிப்பதாக கூறபட்டுள்ளது என்றாலும் 2013க்கு முன்பு நான் விவசாய நிலங்களை அனுபவித்தேன் என்று சொல்லவில்லை என்றால் சரி. என்னுடைய வாக்குமூலத்தில் பொய்யான தகவல்களை திரித்து கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் குணசேகருடன் தண்ணி கட்ட போவதாக கூறியுள்ளது உண்மையல்ல என்று சொன்னால் தவறு. என் தம்பிக்கு பாகத்தில் விட்ட நிலத்திற்கு சின்னராஜிடம் எங்கள் குடும்பத்தில் பாதை கேட்டோமா என்றால் கேட்கவில்லை. முத்துசாமி நிலத்தின் வழியாக பாதை வாங்குவதற்கு முன்பு சின்னராஜிடம் பாதை கேட்டோம் என்றால் நாங்கள் கேட்கவில்லை. முத்துசாமி நிலத்தில் பாதை வாங்குவதற்கு முன்பு எங்கள் தம்பியிடம் கொடுத்த நிலத்தில் செல்ல ஆற்று வழியாக வந்து சின்னராஜ் வழியாக போய் எங்கள் தம்பியிடம் உள்ள நிலத்திற்கு செல்ல வேண்டும். இந்த வழியாக தான் சென்று கொண்டு இருந்தோம். இந்த பாதை சம்பந்தமாக கிரையம் கேட்ட போது எனக்கும் சின்னராஜிக்கும் விரோதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கும் வாதிக்கும் 2015ம் ஆண்டு தள்ளுமுள்ளு ஏற்பட்டது என்று போலீஸில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரி. அப்போது குணசேகரனை

போலீஸார் காவலில் வைத்துவிட்டார்கள் என்றால் தவறு. நான் தான் குணசேகரனை மீட்டு கொண்டு வந்தேன் என்றால் தவறு. எனக்கு 64 வயதாகிறது. 1955ம் ஆண்டு பிறந்தேன். பாகபிரித்தல் சம்பந்தமாக நடந்ததாக வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள பஞ்சாயத்தில் சின்னராஜ் கலந்து கொண்டாரா என்றால் இல்லை. சின்னராஜனுடைய சிறிய மகன் அவருடைய அப்பா வரமாட்டார் என்றும் நான் பொறுப்பு ஏற்றுகொள்கிறேன் என்றும் சொன்னார். பஞ்சாயத்து நடந்தது என்றும் அதில் தரப்பினர்கள் ஒப்புகொண்டார்கள் என்றும் நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு வீடு, நிலங்கள் ஒதுக்கபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. அரும்பாவூர், மேட்டூர் போன்ற இடங்களில் உள்ள நிலம், வீடுகள் 1ம் பிரதிவாதியின் சொந்த சொத்து என்றாலும் அது குடும்ப பூர்வீக சொத்துக்கள் அல்ல என்று சொன்னாலும் சரியல்ல. எங்கள் நிலத்திற்கு கீழ் பக்கம் உள்ள நிலங்கள் பூர்வீக சொத்து என்று அவரே சொல்லியுள்ளார். சின்னராஜ் மேற்படி சொத்துக்களை கிரையம் வாங்கியது எனக்கு தெரியாது. சின்னராஜ் அவருடைய அம்மாவின் சொத்துக்களை விற்று கிரையம் வாங்கினார். சின்னராஜின் அப்பாவிற்கு அந்த ஊரில் பூர்வீக சொத்துக்கள் எதுவும் கிடையாது என்றால் எனக்கு தெரியாது. சின்னராஜ் கோர்ட் கேஸ் என்று அலைவார் என்றும் குணசேகரன் தான் நிலத்தை அனுபவித்தார் என்றும் நான் கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. நான் சத்துணவு பணியாளராக பணியில் இருப்பதால் என் குடும்ப சொத்துக்களில் கூட சென்றது இல்லை என்று சொன்னால் தவறு. நான் பகுதி நேரம் பணி செய்கிறேன். மீதி நேரம் விவசாயம் செய்கிறேன். எனக்கு வாதி நெருங்கிய நண்பர் என்றாலும் சின்னராஜின் மீதுள்ள மனவருத்தத்தின் காரணமாக 2 பேரையும் நான் தான் தூண்டிவிட்டு கோர்டுக்கு அலைய வைக்கிறேன் என்று சொன்னால் தவறு. 2 பேருமே எனக்கு நண்பர்கள் தான். நான் என் நண்பருக்காக பொய்

சாட்சியளிக்கிறேன் என்று சொன்னால் தவறு. தாவா சொத்தில் வாதிக்கு நான் சொல்வதுபோல பாக உரிமையில்லை என்று சொன்னால் தவறு.